ஸ்ரீ தன்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை.

Vol. 14. | JULY 1952. | No. 7




श्रीसुधादिसोदरौषधीशसंभवोज्वला
धीविलासहेतुगोप्रसारशोधितान्तरा॥
कामदा कलावती कवीन्द्रवर्णिता परं
पत्रिकेश्वराश्रया विभातु वैद्यचंद्रिका॥

ஆசிரியர்: பண்டிட் S. நாராயணய்யங்கார், மதுரை.
உதவி ஆசிரியர்: பண்டிட் P. S. ராமசர்மா, கரூர்.

வருஷ சந்தா 5—0—0

கோட்டக்கல்

## ஆர்ய வைத்தியசாலையின்

**மருந்துகள் எல்லா வித வியாதிகளையும் பூர்ண குணப்படுத்துவதுடன், வைத்தியர் களின் கீர்த்தியையும் பாதுகாக்கிறது.**

எல்லா வித நோய்களுக்கும் பூர்ண பரிஹாரம் தேடுகிறவர்கள்

**எங்கள் தலைமை வைத்யர்**

## P. M. வாரியரை

நேராகவோ, தபால் மூலமாகவோ

**யோஜனை கேட்டு பலன் அடையலாம்**

**நரஸிம்ம ரஸாயனம், க்ஷீரபலா**

முதலிய மருந்துகளின் சிறப்பு நிகரற்றது.

எங்கள்

## "பாடாதி சூரணம்"

பல்லின் இகறில் சீ வருவது, ரக்தம் வருவது, அரிப்பு, பல் ஆட்டம், பல் தேய்ந்து போவது, முதலிய பல் இகற் சம்பந்தமான நோய்களை முற்றிலும் தீர்த்து, பல்லிற்கும், இகறுக்கும் வலுவூட்டக் கூடியது. ஆகாரத்திற்கு முன் இச்சூர்ணத்தை தேனில் கட்டியாகக் குழைத்து இகறிலும், பல்லிலும் தடவி அழுத்தி தேய்த்து சிறிது நேரம் கழித்து வென்னீரினல் கொப்பளிக்கவும்.

கள்ளிக்கோட்டை, பாலக்காடு, திரூர், ஈரோடு பிராஞ்சுகளில் நல்ல பயிற்சியும், திறமையும் வாய்ந்த எங்கள் உதவி வைத்யர்கள் எப்போழுதும் இருப்பார்கள்.

*Manager.*

**Arya Vaidyasala, Kottakal P. O.,**

**S. MALABAR.**

## பொருளடக்கம்.

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மருந்துகளை மதுவாக்குவது நியாயமா? | 1 |
| 2. | ॥ केशवर्धनी तैलम् ॥ (Dr. S. வெங்கட்டராஜன், L. I. M.) | 3 |
| 3. | பவுத்திர ரோகம் (Dr. S. வெங்கட்டராஜன், L. I. M.) | 4 |
| 4. | ராஜ்யத் தலைவர்கள் கூறுவது | 7 |
| 5. | வைத்யச் செய்திகள் | 9 |
| 6. | யோகரத்நாகரம் | 63–66 |
| 7. | திரட்டுவாகடம் ருO | 9–14 |

உ

# மருந்துகளை மதுவாக்குவது நியாயமா?

நமது அரசாங்கத்தால் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் ஆஸவங்கள் அரிஷ்டங்கள் முதலியவைகளை உட்படுத்தி அதற்காக லைசன்ஸ் வாங்க வேண்டுமென்று மதுவிலக்கு அமுலுக்கு வந்த நாள்முதல் நடந்து வருகிறது. இது மிகவும் அநீதி என்பது ஆஸவாரிஷ்டங்களின் குணங்களையும் அதற்குப் போதை தரக்கூடிய தன்மை இல்லை என்பதையும் அறிந்தவர்களுக்கு நன்குக விளக்கும். இது விஷயமாக அரசாங்கத்தில் எந்தவிதமாக முறையிட்டாலும் ஒன்றும் கவனிப்பாரில்லை என்றுமட்டுமல்ல நாளுக்குநாள் அந்தச் சட்டத்தில் பல பிரிவுகளை சிருஷ்டித்து வைத்யர்களைத் துன்புறுத்தவும் லஞ்சம் முதலியதை அதிகப்படுத்தவும் வேண்டிய வழிகள் உண்டு பண்ணப்படுகின்றன. இம்மாதிரி செய்யப்படும் காரியங்களில் வைத்யர்களுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் துன்பம் நேரிடுவதைப் புரிந்துகொண்டு நிவாரணம் அளிப்பதே உசிதம். அவ்விதம் அல்லாமல் யாராவது ஒருவர் சாராயத்திற்கு ஆஸவம் என்ற லேபிள்

போட்டு விற்றுவிட்டால் எல்லா ஆஸவங்களும் சாராயம் போன்றது என்று தீர்மானிக்கலாமா? சாராயம் காய்ச்சி விற்பவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் தண்டனையை அவர்களுக்குக் கொடுப்பதுதான் தகுந்ததேயல்லாமல் ஒழுங்கான வழியில் நடப்பவர்களையும் கட்டுப் படுத்தும் சட்டங்கள் தயாரிப்பது சிறிதும் பொருந்தாது அவ்விதம் சட்டம் தயார் செய்தாலும் விதிக்கப்படும் வரி பாரமில்லாமல் இருக்கவேண்டும். ஆஸவங்கள் எவ்வளவு சாப்பிட்டாலும் போதை ஏற்படாது என்பது எவ்வளவோதரம் பரீக்ஷை செய்து பார்த்தும் போதை தரக்கூடிய வஸ்துக்களைச் சேர்த்துத் தாயாரிப் பவர்களைக் கண்டுபிடித்துக் கண்டிப்பதற்கு பதிலாக பொதுவாக எல்லா வைத்யசாலைகளையும் கள்ளுக்கடையாக்குவது ந்யாயமா?

## வைத்யன்.

அகில இலங்கை சித்த ஆயுர்வேத வைத்ய சங்கத்தாரால் ஜாப்னுவிலிருந்து வெளியிடப்படும் வைத்யன்என்ற பத்திரிகையை பார்வையிட்டோம். இது வைத்யர்களுக்கு உபயோகமானது, இதை ஆதரிப்பது ஒவ்வொரு வைத்யர்களின் கடமையாகும்.

தேசீய வைத்யப் பத்திரிகைகள் தற்காலம் மிகவும் குறைவாய் இருப்பதால் இருக்கும் பத்திரிகைகளை ஆதரித்தது வளர்ப்பதுதான் உத்ஸாஹ காரமாக இருக்கும்.

---

## 2 ॥ केशवर्धनी तैलम् ॥

### Dr. S. வெங்கட்டராஜன் L. I. M. (Regd.)

" योगसंग्रहम् " என்ற ஸரஸ்வதி மஹால் சுவடியிலிருந்து எடுக்கப்பட்டது.

मार्कवीन्द्रसिता नीली समङ्गा विजया जया।
केतकीमूल कुसुमा शिफा धात्रीफलानि च ॥
एतेषां स्वरसं कल्कं तैलप्रस्थं विपाचयेत्।
आविकं गव्यमाजं च माहिषं नारिकेलजम् ॥
पयस्तैलसमं देयं कल्कद्रव्याणि दापयेत्।
यष्टि धात्र्यक्षबीजानि नीलाञ्जनमिदं समम् ॥
गजदन्तस्य भस्मस्य द्विगुणं श्लक्ष्ण चूर्णकम्।
सुमुहूर्ते सुनक्षत्रे नव वस्त्रेणपीडयेत् ॥
केशवर्धन नामेदं तैलं मूर्धरुजापहम्।
केशवृद्धिं च कुरुते अश्विनीदेव निर्मितम् ॥

(இதன் பொருள்) கையாந்தகரை, வெண்ஞெச்சி, அவுரி, வரள்சுண்டி (ஆடு தீண்டாப்பாளை), கஞ்சா, தழுதாழை, தாழை வேர், தாழம்பூ, தாமரைக்கிழங்கு நெல்லிக்காய் முதலான சரக்கு களின் சாறு தனித்தனியாக 1 சேர், சுத்தமான நல்லெண்ணெய் 10½ சேர், செம்மறியாட்டுப்பால் 10½ சேர், வெள்ளாட்டுப்பால் 10½ சேர், பசுவின் பால் 10½ சேர், எருமைப் பால் 10½ சேர், தேங்காய்ப்பால் (சுயமானது 10½ படி இவைகளை யொன்று கலந்து கொள்ளவும். பின்பு அதிமதுரம் நெல்லிப்பருப்பு, தான்றிப்பருப்பு, நீலாஞ்சனக்கல், இந்நான்கையும் தனித்தனி 7½ தோலா வீத மெடுத்துப் பால் விட்டு நன்றாக அரைத்துச் சாறு கலந்த எண்ணெ யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்திலிறக்கி வடிக் கட்டி வைத்துக் கொள்ளவும்.

இத்தைலத்துடன், கருக்கிய யானை தந்தம் 15 தோலாவைப் பொடித்து வஸ்திரகாயம் செய்து குழப்பிக்கொண்டு, ஒரு பழகிய கலசத்திலிட்டுப் புது வஸ்திரத்தினால் நன்றாக மூடி பத்திரப்படுத்த வும். (சுமார் 15 நாட்கள் சென்ற பின்) நல்ல நக்ஷத்திரத்தில் இதைப் பிரித்து உபயோகிக்கவும்.

இத்தைலத்தின் பெயர் 'கேசவர்த்தினி'. தலையிலுண்டாகும் பற்பல ரோக வகைகளை (தலை வலி உள்பட)ப் போக்குவதில் சிறந்தது. மயிரும் நன்ருக வளரும். இது அச்வினி தேவர்களால் செய்யப்பட்டதாகும்.

## பவுத்திர ரோகம் (தொடர்ச்சி.)

---

Dr. S வெங்கட்டராஜன், L. I. M. (Regd).

### 8. அர்சோ பகந்தரம்.

முன் கூறியபடி பித்த கபங்கள் தூஷிக்கப்பட்டு அர்சஸ் என்னும் மூல முளையைப் பற்றிக்கொண்டு, அதனடியில் அரிப்புடன் கூடிய வீக்கத்தை யுண்டுபண்ணும். இது சீக்கிரம் பழுத்து உடைந்து நீர்க்கசிவையுண்டாக்கும். துவாரங்களும் ஏற்படும். இனி ஆங்கில முறைப்படி பவுத்திரத்தின் வகைகளை ஆராய்வோம்.

Fistula என்று பொதுவாகக் கூறினுல் தோலுக்கு இடையிலோ இயற்கைக்கு மாருக ஏற்படும் புரைகளுக்குப் பெயராகும். இதன் ஒரு பாகம் எப்போதுமே திறந்திருக்கும். இருபுறங்களிலும் வழிகளேற்பட்டு எந்தெந்த அவயவங்களைப் பாதிக்கின்றதோ அதற்குத் தக்கபடி பெயர்களும் வழங்கப்படுகின்றன.

அவைகளாவன :

Fistula Biliary (பித்தப் பையிலுள்ளது)
,, Bronchial (சுவாசக்குழாய்க்குள்)
,, Faecal (மலத்தைப்பற்றியது)
,, In ano (மலத்வாரத்திற்குச் சமீபமுள்ளது)
,, Lachrymal (கண்ணீர்ப் பையிலுள்ளது)
,, Recto Vaginal (பெண் குறிக்கும், குதத்திற்குமிடையில்)
,, Salivary (உமிழ் நீர் கோளத்தில்)
,, Umbilical (தொப்பிளுக்குள்)
,, Ureteral (மூத்திரப்பையில்)
,, Vesico Intestinal (மூத்திரப்பைக்கும் குடலுக்குமிடையில்)
,, Vesico Vaginal (மூத்திரப் பைக்கும் பெண் குறிக்குமிடையில்)

இவைகளுள் சாதாரணமாக பவுத்திரம் என்று வழங்கும் நோய் " **Fistula in ano** " என்பதைக் குறிக்கும். ஆனாலும், குதப்ர தேசங்களில் ஏற்படும் கீழ்கண் புரைகளைப் பவுத்திரமாகக் கொள்ளக்கூடாது.

(1) ஆண்குறிக்குக் கீழே குதப்பிரதேசத்திலுள்ள தைய லுக்கும் பக்கத்திலோ அல்லது தையலிலோ ஏற்படும் துவாரம் மூத்திரப்பை சம்மந்தப்பட்டதாகும்.

(2) ஆசன வாய்க்கு வெளிப்புறத்தில் சுமார் 2 அங்குலம் தள்ளி துவாரம் ஏற்பட்டால் அது Pelvic Rectal abscess என்பதாகும்.

(3) ஆஸனத்வாரத்திற்குக் கீழேயுள்ள தையலில் ஏற்படும் கட்டிகளை Suppurating Dermoid என்று கூறுகின்றனர்.

(4) ஷை தையலுக்கு ஒரு அங்குலம் தள்ளி வலது கைப் புறத்திலோ அல்லது இடது கைப்புறத்திலோ அல்லது இரு இடங் களிலுமோ துவாரங்கள் உண்டானால் அது Presacral Lympha denitis எனப்படும் ரோகமாகும்.

(5) ஆஸனத்வாரத்திற்குக் கீழேயும், இரு பின்புறமும் சேரும் இடத்திலும் துவாரமுண்டானால் அது இரத்தக்கட்டியை (Haematoma)க் குறிக்கும்,

### ஆஸன பவுத்திரத்தின் வகைகள்.

1 Sub cutaneous Fistula
2. Sub mucous ,,
3. Intermuscular ,,
4. Subsphincteric ,,
5. Para rectal ,,
6. Ischio rectal ,

மேற்சொன்ன வகைகளையும், அதன் அமைப்பையும், இருப் பிடத்தையும் அறிய வேண்டுமேனில் பவுத்திரத்தின் வாய், உள் புரை, அதன் முடிவு, அதிலுள்ள கிளைகள், முதலியவைகளை உற்று நோக்கவேண்டும்.

### வெளிப்புற வாயிலிருந்து அறிந்துகொள்ளக்கூடியவை.

1. துவாரம் சிறியதாக இருந்து, உள்ளிழுக்கப்பட்டு ஆஸன த்வாரத்திலிருந்து சுமார் 1 அங்குல தூரத்தில் காணப்பட்டால் அது Subcutaneous Fistulaவாகும்.

2. துவாரம் பெரியதாக இருந்து, அதன் விளிம்புகள் புதைந்து, சமீபத்திலிருக்கும் தோல் சிவப்பு நிறமுள்ளதாக இருந்தால் அது க்ஷயரோக சம்மந்தமான பவுத்திரமாகும்.

3. துவாரத்திலிருந்து சதை துருத்திக்கொண்டிருந்தால் பவுத்திரம் ஆழத்திலிருப்பதைக் குறிக்கிறன. அது Para Rectal, அல்லது Ischio rectal Fistulaவாகும். மேலும் அதன் வெளிப்புறத்தில் பற்பல துவாரங்களும் காணப்படும்

4 ஆஸனத்வாரத்தின் சுருக்கங்களில் சுமார் ½ அங்குலத்திற்குள்ளும், அதன் புரை ஆசனத்வாரத்திற்குச் சம தூரத்திலேயே செல்லுமே யொழிய ஆசனத்வாரத்திற்குள் திறவாது. இது Submucous Fistulaவாகும்.

**உள் புற துவாரத்திலிருந்து அறிந்துகொள்ளக்கூடியவை**

பொதுவாக எந்த வகையைச் சேர்ந்ததாயினும், அதன் உள் துவாரம் சிறியதாகவும், வட்டமாகவும் இருக்கும். மீன் எலும்பு முதலியவைகள் குத்தி அதனாலேற்பட்ட பவுத்திரமாக இருந்தாலும். க்ஷயரோக சம்மந்தமுள்ளதாக இருந்தாலும், ஆஸன அடைப்பான் (Anal valve) சிதைவுற்றாலும் அதன் உள்துவாரம் பெரியதாகவே இருக்கும். இத்துவாரம் Lavator ani என்ற மாம்ஸத்திற்குமேல் நிற்பதுடன் ஆஸன த்வாரத்திற்கு 2 அங்குல அளவில் நின்றால் அது Para Rectal Fistulaவாகும்.

Submucous Fistulaவில் இதன் உள் துவாரம் Hiltons Lineக்கு மேல் நிற்கும் (ஆஸனத்வாரத்திலுள்ள மிருதுவான சதையும், தோலும் சந்திக்குமிடத்திலுள்ள வெண்மையான கோட்டிற்கு Hilton's Line என்று பெயர்.)

Intermuscular Fistula:— மலக்குழாயில் காணப்படும் சுருங்கும் தசைகளுக்கு இடையில் இதன் துவாரம் நிற்கும். சுருங்கும் தசைகள் External Sphincter ani (வெளிப்புற சுருங்கும் தசை) என்றும், Internal sphincter ani (உள்புற சுருங்கும் தசை) என்றும் இருவகைகளாகும். இதனால் ஆஸன த்வாரம் மலப்ரவருத்தியின்போது விரிந்து கொடுக்கவும், இதர வேளைகளில் சுருங்கி இருக்கவும் சாத்யமாகிறது

வெளிப்புறத்தின் துவாரம் மூலம் புரைகள் நேரானவைகளா அல்லது வளைந்து செல்லுகின்றனவா அல்லது பற்பல கிளைகளுடன் கூடியதாக இருக்கின்றனவா என்பதை அறியலாம் (தொடரும்)

# ராஜ்யத் தலைவர்கள் கூறுவது.

“பாரதத்தின் ஜலம் வாயு முதலிய இயற்கை நிலைக்கு ஆயுர் வேத ஔஷத முறையே ஏற்றதாக இருக்கின்றன என்பது எனது திடமான அபிப்பிராயம். நான் ஆயுர்வேத முறையை தற்காலத்தில் மிகவும் பயன்படக் கூடியதாகச் செய்து எனது ராஜ்யத்தில் ஜனங் களுக்கு பிரியமாக இருக்கும்படியாகச் செய்ய முயலுகிறேன்.”

**ஸ்ரீ சாந்திலால்ஷா**, பம்பாய் ராஜ்ய சுகாதார மந்திரி.

“ஆயுர்வேதம் இயற்கை நியமங்களை மிகவும் அனுஸரிக்கின் றது. அதன்படி சிகித்ஸையையும் செய்கின்றது. அதனாலேயே அதனிடம் மிகவும் மதிப்பு எனக்கு ஏற்படுகின்றது. ஆயுர்வேதமும், அலோபதியும் ரோக நிதானத்திலும் முடிவிலும் எல்லாவகையிலும் தனிப்பட்டிருப்பதால் அவைகளைக் கலப்பதை நான் சரியெனக் கூறமாட்டேன் ஆனால் இவ்விஷயம் அவ்விஷயத்தையறிந்தவர் களால் ஆராயத் தகுந்தது. ஆனால் நான் ஆயுர்வேத பிரேமிகளின் உதவிகொண்டு ஆயுர்வேதத்தின் சுத்தமான அபிவிருத்திக்கும் ஸேவைக்கும் பாடுபடுவேன்.”

**ஸ்ரீ மோரார் ஜீ தேசாய்**, பம்பாய் பிரதான மந்திரி.

“பொது ஜனங்களின் சிகித்ஸை விஷயமான அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் எமது சர்க்காரின் நோக்கம்-ஸௌராஷ்டிர தேசத்தில் மட்டுமல்லாது எல்லா ராஜ்யங் களிலும் இத்தேவை ஆயுர்வேத மூலமாகத்தான் பூர்த்தி அடைய வேண்டும் என்பதே ஆதலால் வருங்காலத்தில் புதிதாக ஆஸ்பத் திரிகள் ஏற்படுத்தப்பட்டால் அவை கூடியவரை ஆயுர்வேத வைத்யசாலைகளாகவே இருக்கவேண்டுமென எனது சர்க்கார் தீர்மானித்திருக்கின்றது. ஸௌராஷ்டிரத்திலுள்ள **3–4**வது தரத் திலுள்ள ஆஸ்பத்திரிகளையும் கூடிய சீக்கிரம் ஆயுர்வேத வைத்ய சாலைகளாக மாற்றவும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.”

**ஸ்ரீ ஜாம்ஸாஹேப்**, ராஜ்யப் பிரமுகர், ஸௌராஷ்டிரம்.

(ஸௌராஷ்டிர சட்டசபை துவங்கும் சமயத்தில்)

“சர்க்கார் கிராமங்களில் அதிகமாக அலோபதி ஆஸ்பத்திரி களை வைப்பதிலேயே குறியாக இருக்கின்றது. எனினும் நிதி நிலைமை அதற்கு ஒத்ததாக இல்லை. ஹைதராபாத்தில் **24000**

கிராமங்கள் உள்ளன. இதில் **200** அலோபதி ஆஸ்பத்திரிகளும் **100** யூனனி ஆஸ்பத்திரிகளும், சமீபத்திலேயே ஆரம்பிக்கப்பட்ட **52** ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளும் உள்ளன. ஜனங்களிடையே ஏதாவதொரு சிகித்ஸை முறையைப் பலவந்தமாகப் புகுத்துவது சாத்தியமாகாது. **52** ஆயுர்வேத வைத்யசாலேகளைத் திறந்ததில் ஜனங்களிடையே ஏற்பட்டுள்ள உற்சாகத்தையும், மதிப்பையும், நோக்குங்கால் ஜனங்களுக்கு ஆயுர்வேதத்தில் இருக்கும், நன் மதிப்பு நன்கு வெளியாகின்றது. பிரிட்டிஷ் அரசாங்கமும், நிஜாம் அரசாங்கமும், ஆயுர்வேதத்தை அழிக்கப்பாடுபேட்டும், அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லே. ஆனுல் அவர்கள் ஏற்படுத்திய கெடுதிகளேப்போக்க தற்போது நல்ல சமயம் வாய்த்துள்ளது. அதனுல் ஹைதராபாத் ராஜ்யத்தில் இனி ஆயுர்வேதத்தின் முன் னேற்றம், தங்குதடையற்று ஏற்படும் என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன். கூடிய சீககிரம், ஆயுர்வேத சிகித்சை செய்யும் வைத்யசாலேகளில் படுக்கை வசதிகளே அதிகப்படுத்தியும், கிராமங் களில் பல ஆயுர்வேதசாலேகளே ஏற்படுத்தியும் ஆயுர்வேத மஹா வித்யாலயத்திற்கு ஒரு நல்ல மாணவர் விடுதியை ஏற்படுத்தியும் இவ்வாறு பல வகையில் அரசாங்கம் ஆயுர்வேதத்திற்கு அபிவிருத்தி அளிப்பதில் தயங்காது என்று உறுதியளிக்கிறேன். ''

**ஸ்ரீ பூல்சந்த காந்தி**, ஹைதராபாத்–சுகாதார மந்திரி.

" ஆயுர்வேதத்தின் பிரசாரமும் அதன் மூலம் ஜனங்களி டையே ஸேவையுமே முக்கிய நோக்கமாகக்கோண்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஆயுர்வேத வைத்யசாலேகளே ஏற்படுத்தவேண்டும். எனக்கு முன்னிருந்த மந்திரிகளால் ஆயுர்வேத விஷயத்தில் ஆரா யப்பட்ட திட்டங்களேக் கிரியாம்சையில் நிறைவேற்றி மேலும் அவைகளே விஸ்தரிக்க ஏற்பாடு செய்வேன் என்று தங்களுக்கு உறுதி கூறுகிறேன். "

**ஸ்ரீ மா. ஸ. கன்னம்வார்**, மத்தியப் பிரதேச–சுகாதார மந்திரி.

" நான் ஆறு வருஷங்கள் சுகாதார மந்திரியாக இருந்தேன். அதில் ஏற்பட்ட அனுபவத்தின்பேரில் ஆயுர்வேதத்தைத் தவிர மற்ற எவ்வகை வைத்ய முறையாலும் இந்திய ஜனங்களுக்கு ஆரோக்கியப் பாதுகாப்பு ஏற்படாது என்பதை திடமாகக்கூறு வேன். ஆயுர்வேதத்திற்கும் அலோபதிக்கும் உ ள் ள முக்கிய

வேற்றுமை யாதெனில் ஆயுர்வேதத்தை மிக எளிய ஜனங்கள்கூட அறிந்துள்ளார்கள் என்பதும் அலோபதி சாதாரண ஜனங்களால் அறியக்கூடிய வகையில் இல்லை என்பதுமே தான் ஆரோக்கிய சித்தாந்தங்களை நன்கு அறியாதவரை ஆரோக்கியத்தைப் பாதுகாக்க இயலாது டாக்டர்கள் அதிகமாக ஆக வியாதிகளும் வளருகின்றன. வியாதிகளைக் குறைப்பது என்பது டாக்டர்களை அதிகப்படுத்துவதால் முடியக்கூடிய காரியமல்ல. ஆயுர்வேதம்தான் எல்லா ஜனங்களுக்கும் உபகாரமளிக்கவல்லது. அதனுல் தற்போதைய சுகாதார மந்திரியிடம், ஆயுர்வேத விஷயமான எல்லாவிதமான அபிவிருத்தி மார்க்கங்களை நன்கு பரிசீலித்து நடைமுறையில் கொணர வேண்டுகிறேன்."

டாக்டர், **வா. சி. பார்லிங்கே,**
முன்னுள் மத்தியப் பிரதேச சுகாதார மந்திரி.

"பிரதி வருஷமும் **25** புதிய ஆயுர்வேத வைத்யசாலைகளை ஏற்படுத்தி **10** வருஷங்களுக்குள் பெப்ஸு ராஜ்யத்தில் **250** ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை நிறுவ சர்க்கார் தீர்மானித்திருக்கின்றது. ஆயுர்வேத அபிவிருத்திக்காக தேவையானுல் புதிய சட்டமியற்றவும். அதை ஜனங்களிடையே பரவச்செய்ய எவ்வித ஏற்பாடுகளைச் செய்யவும் சர்க்கார் தயாராய் இருக்கின்றது."

**ஸ்ரீ ஸர்தார் ஞானஸிம்ஹ ராரேவாலா,** பெப்ஸுவின் பிரதம மந்திரி.

**வைத்யச் செய்திகள்.**

## *அய்கிய வைத்திய சங்கம், கும்பகோணம்.*

### இரண்டாவது ஆண்டு விழா நிகழ்ச்சிகள்.

**29—6—52** காலை **10-30** மணிக்கு இங்கர் போர்டார் டவுன் ஹாலில் அய்கிய வைத்திய சங்கத்தின் **2**-வது ஆண்டு விழா திரு R. S. மணி அவர்களது இறை வணக்கத்துடன் துவக்கப் பெற்றது. புலவர் முத்துவேல் அவர்கள் வரவேற்புரை கூறினுர்.

சுவாமி சுந்திரானந்த சரஸ்வதி அவர்கள், தமது துவக்கவுரையில் கூறியதாவது:—

மருத்துவக் கலையைக் கண்டாராய்ந்து வெளியிட்ட சித்தர்கள் நமது நாட்டிற்குகந்த முறையில் மருத்துவ முறையை வகுத்திருந்த போதிலும் நாம் அம்மேலோரின் பெருமையையும் அவர்கள்

வகுத்துச் சென்ற கலையின் பெருமையையே சரியான அளவில் உணரவில்லை. அரசாங்கம் மேனாட்டு வைத்ய முறைக்கு ஆதர வளித்தும் மருத்துவமுறை பரிபாஷையில் இருப்பதும், இந்திய மேனாட்டு வைத்திய முறைகளில் சம்மந்தம் கூடாதென்பதும், இந்திய வைத்தியத் தொழிலையே மூடிவிடவேண்டும் என்று சிலர் சொல்வதும் நம்தொழில் முன்னேற்றமடையாதிருப்பதின் காரணங் களாம் எனினும் நமது குற்றங்குறைகளை உணர்ந்து திருத்திக் கொள்வதுடன், மேனாட்டு வைத்திய முறைகளிலுள்ள சிறப்பான அம்சங்களையும் ஏறறுக்கொள்ளவேண்டும். ஆண்டிற்கொருமுறை நாமனைவரும் ஒன்றுகூடுதல் இன்றியமையாதது.

ஒவ்வோரு வைத்தியரும் தம்மிடம் வரும் நோயாளிகளது விலாசம், நோயின் தன்மை, காரணம், கொடுக்கப்பட்ட மருந்து கள் இவைபற்றிய ரிக்கார்டுகள் வைத்திருத்தல் வேண்டும். நமது குறைகளையும், நாம் அவ்வப்போது செய்யும் ஆராய்ச்சி முறைகளை யும் வெளியிட பத்திரிகைகள் இல்லாத குறை நீக்கப்படவேண் டும். நம்மிடையே அய்கியமும், தீவிரமான செயல் திறமையும், இல்லாதவரை அரசாங்கத்தைகுறை கூறுவதால்மட்டும் பயனில்லை நம்மிடையே ஒற்றுமை அதிகரித்து நாம் சொல்லளவுடன் நின்று விடாமல் செய்கையில் அதித முயற்சியெடுத்துக் கொள்வோமானல் ஞானிகளாகிய நமது சித்தர்கள் வகுத்துச்சென்ற வைத்திய முறை விரைவில் முன்னேற்றமடையும்.

அடுத்தபடியாக சொற்பொழிவாற்றிய ஆண்டு விழாத் தலைவர் Dr. B. S. ஆசாரியா B. A , L. M. & S, F I. M., அவர்கள் தமது பேருரையில் கூறியதை தனியே வெளியீடாக வெளியிடப்படும்.

தலைவருக்கு அடுத்ததாக ஸ்ரீரங்கம் திரு. V. சுப்ரமண்யம் அவர்கள் (பண்டிட்ஸ் கமிட்டி மெம்பர்) பேசியதாவது:—

வைத்தியத் தொழிலில் ஈடுபட்ட நான் அரசாங்கத்தின் கூட்டுற வையும், பூர்ண ஆதரவையும் பெறவே அரசியலில் ஈடுபட்டேன். நாம் நமது மருத்துவ முறைகள்பற்றிய தெளிவான அறிவுபெற வேண்டும். தொன்று தொட்டுவரும் நமது முறை, உடலுக்கு மட்டும் சிகித்சையளிப்பதுடன் நின்றுவிடுவதில்லை. உடல் நோயை போக்க மருந்துகளும். மன நோயைப்போக்க வேதாந்த சாஸ்திரங் களும் தேவை. யோக ஞானத்திலேயே இந்திய வைத்யம் பூர்ணத் வம் பெறுகிறது. மனநோய் தீர்க்கப்படாமல்தான் உடல் நோய்கள்

தீரும். என்பது நமது சித்தர்களின் முடிந்த முடிபு. தற்போதுள்ள மேனாட்டு வைத்திய கல்லூரிகள் உடலுக்குமட்டும் மருந்து தருகிற டாக்டர்களாலேயே உருவாக்கப்பட்டது. அதுசரியான முறையல்ல. வேலையற்றவர்கள் எல்லோரும் வைத்தியர்களாகி விட முடியாது. சாஸ்திர ஞானத்துடன், வைத்தியர்களாக விரும்புவோர், தமிழிலும், உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்திலும் நல்ல பரிச்சயமுடையவர்களாக இருக்கவேண்டும். குறைந்த பட்சம் " இண்டர் மீடியட் " கல்வியாவது பெற்றிருக்கவேண்டும். இதற்குமேல் வைத்தியப் பயிற்சி வேண்டும். இவற்றிற்கெல்லாம் அரசாங்கம் உடனடியாக வசதிகள் செய்துதரவேண்டும்.

சரீரத்துடன்மட்டும் நின்றுவிடாது யோக ரீதியாகவும், ஞான ரீதியாகவுமுள்ள நமதுமுறைகளை தற்போதுள்ள-அலோபதி வைத்தியர்களைமட்டுமே கொண்ட-மெடிகல் போர்டினால் தெரிந்துகொள்ளவோ, அவற்றின் வளர்ச்சிக்கான வேலைகளைச் செய்யவோ முடியாது. அரசாங்கம் அந்த வேலையை நம்மிடமே விட்டுவிட வேண்டும். இந்திய வைத்தியக் கௌன்ஸில் ஒன்று ஏற்படுத்த வேண்டும். அதற்கு எல்லா வைத்யர்களது ஒத்துழைப்பும் இன்றியமையாதது. நாம் மத்திய ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்தி நமது பண்டைய முறையை நன்கு ஆராய்ந்து பரீசீலித்து, திட்டமான முறைகளை.வெளியிடவேண்டும். நமது ஆராய்ச்சிகளையும், திட்டங்களையும் புத்தக வடிவில் வெளியிடவேண்டும். இவை செயலளவில் நிறைவேறும் பொழுதுதான் நமது கலை முன்னேற்றமடையும். அதற்கு 10 வருடங்களாகலாம். அதுவரை அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் இத்துறையில் நம்மை நாமே மேன்மேலும் சீர்திருத்திக்கொள்ள ஆதரவு அளிக்கவேண்டும் அரசாங்கம்

பிறகு கூட்டம் பகல் 1 மணிக்குக் கலைந்தது மீண்டும் பிற்பகல் 3 மணிக்குத் துவங்கியது.

கடிதங்கள் தந்திகள் மூலம் வந்த வாழ்த்துச் செய்திகளைப் பொதுக் காரியதர்சி வாசித்தார்.

ஸ்வாமி அத்வயானந்த சரஸ்வதி தத்துவார்த்தத்துடன் ஒரு மணி பேசினர். தமிழ் நாடு ஆயுர்வேத மகாமண்டலம் (சேலம் கிளை) தலைவர் டாக்டர் சஞ்சீவி அவர்கள் ஆராய்ச்சியுடன் ½ மணி நேரம் பேசினர்.

கீழ்க்கண்ட தீர்மானத்தை டாக்டர் R. S. மணி அவர்கள் மூன் மொழிய, G. சுப்பையா வைத்தியர் அவர்கள் ஆமோதிக்க, ஏகமனதாக நிறைவேறியது:—

சென்னை மாகாணத்தில் ஆயிரக்கணக்கான பரம்பரை இந்திய வைத்தியர்கள் சர்க்கார் உத்திரவுபடி 'B' ரிஜிஸ்டருக்காக பணங்கட்டி பல வருடங்களாகக் காத்திருப்பவர்களுக்கு உடனே ரிஜிஸ்டர் செய்து விடுவதுடன் நிரந்தரமாக 'B' கிளாஸ் ரிஜிஸ்டர் ஒன்று இந்நாட்டிற்கும் கலைக்கும் தேவையாக இருப்பதால் அதற்குத்தக்க முறையில் அரசாங்கம் தடைகளை நீக்கி, உத்திரவு மூலம் பதிவு செய்துவர வேண்டும். என்று கேட்டுக்கோள்வதை இந்திய வைத்திய கௌரவ டைரக்டர் அவர்கள் மூலம் சர்க்காருக்கு தெரிவிப்பதற்கு ஸ்ரீலஸ்ரீ சுந்தரானந்தா சரஸ்வதி சுவாமிகளுக்கு இந்த சங்கம் அதிகாரம் அளிக்கின்றது.

இதன் பின்னர், இந்நகர் நடேச தீட்சதர் அவர்களும், சுந்தர குருகுல நிர்வாகி திருமதி. பட்டம்மாள் அவர்களும் யோகாசனங்கள் செய்து காண்பித்தனர்.

மாலை 7 மணிக்கு நடந்த தேநீர் விருந்துக்குப்பின் Dr. C துரைராஜ் H.P I.M. (Indian Medical College Lecturer) அவர்கள் "கிருமிகளும் தொத்து நோய்களும்" என்பது பற்றியும், திருவையாறு திரு. இராமசாமி வைத்யர் அவாகள் "மூப்பு" என்னும் பொருள் பற்றியும், மற்றும் சிலரும் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி R. S. மணி அவர்கள் நன்றி கூற, ஐக்கிய வைத்திய சங்க இரண்டாம் ஆண்டு விழா கூட்டம் இரவு **9-30** மணிக்கு இனிது கலைந்தது.

## *தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்*

### நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்.

**30—6—52**உ அன்று மாலை **4** மணிக்கு தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் நிர்வாக ஸமிதிக் கூட்டம் திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் வைத்ய வாசஸ்பதி ஸ்ரீ P. S. ராமசர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### கீழ்க்கண்ட விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

ஆஸவாரிஷ்டங்கள் விஷயத்தில் மதுவிலக்கு சட்டத்தின்கீழ் ஆஸவாரிஷ்டங்களில் இருபது சதவிகிதத்திற்குமேல் ப்ரூப்ஸ்பிரிட்

(Proof spirit) இருக்சமாஞல் காலனுக்கு **35** ரூபாய் வீதம் தீர்வைகட்ட வேண்டுமென்றும் ஒவ்வொரு ஆஸவாரிஷ்ட லைஸன்ஸ்தாரரும் மூன்று மாதத்திற்கு ஒருதரம் தாங்கள் உபயோகப்படுத்தும் ஆஸவாரிஷ்டங்களைப் பற்றிய வரவு செலவு கணக்குகளை ஜில்லா கலெக்டருக்கு சமர்ப்பிக்கும்போழுது அவ்வாஸவாரிஷ்டங்களில் உள்ள (Proof spiritன்) சதவிகிதமானத்தையும் குறித்தனுப்பும்படியும் வந்துள்ள புதிய திருத்தத்தைப்பற்றி இக்கூட்டம் மிகவும் தீர்க்கமாக ஆலோசித்தது. ஆஸவாரிஷ்டங்களில் இயற்கையாகவே **14** சதவிகிதம்வரை சுத்த ஆல்கோஹால் ஏற்படலாம். அதற்குமேல் ஆல்கோஹால் ஏற்படாது. **14** சதவிகிதமுள்ள Proof ஸ்பிரிட்டிற்குச் சமமாகும். இவ்விதமிருக்கையில் **20** சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஆஸவாரிஷ்டங்களுக்குத் தீர்வை விதிக்கப்படுமோஞல் எல்லா ஆஸவாரிஷ்டங்களையும் இது பாதிக்கும் அதஞல் இத்திருத்தத்தை அமுலுக்குக்கோணர்வதால் ஆஸவாரிஷ்டங்கள் செய்வதையே இது பெரிதும் பாதிக்கும். தனிப்பட்ட வைத்ய நபர்களால் ஆஸவங்களிலுள்ள ஸ்பிரிட்டின் அளவு நிர்ணயிப்பது எளிதல்ல. ஆகையால் திருத்தத்தை அமுலுக்கு கோணராமலிருக்கவேண்டிய ஏற்பாடுகளையும் மற்ற அனுவசியமான கட்டுப்பாடுகளை அகற்றவும் சர்க்காரிடம் ஆவனசெய்ய கீழ்க்கண்ட அங்கத்தினர்கள்கோண்ட ஒரு உப-கமிட்டியை இக்கூட்டம் ஏற்படுத்தி அதற்கு எல்லா விஷயத்திலும் பூர்ண அதிகாரமளிக்கின்றது,

### உப-கமிட்டி உருப்பினர்.

**1.** வைத்ய வாசஸ்பதி ஸ்ரீ P. S. ராமசர்மா, (கரூர்) **2.** ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீரங்கம். **3.** ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள். **4.** ஸ்ரீ A. ராகவராவ். **5.** ஸ்ரீ V. S. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.

இக்கமிட்டிக்கு ஸ்ரீ A ராகவ ராவ் அவர்கள், பிரதான நிர்வாஹியாவார். இக்கமிட்டியின் ஆரம்பச் செலவிற்கு முதலில் மஹாமண்டல அங்கத்தினர்களிடமிருந்து **100** ரூபாய் நன்கோடையாக வஸூலித்து அதிலிருந்தே இது சம்மந்தப்பட்ட செலவுகளைச் செய்யவும் மேற்கோண்டு தோகை தேவையாஞல் அங்கத்தினர்களிடமிருந்து நன்கோடை வஸூலிக்கவும், வஸூலித்த தோகையில் செலவுபோக மிகுதியிருந்தால் நன்கோர்டையாளரின் விருப்பமில்லாமல் அதை போது நிதியில் சேர்க்கக் கூடாதேன்றும் அத்தோகையில் மிகுதியுள்ள அம்சத்தை வீதாசாரப்படி நன்கோடையளித்தவர்களுத்குத் திருப்பிக் கோடுத்துவிட வேண்டுமேன்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கமிட்டியினர் மற்ற பாஷாவாரி மாகாண மஹாமண்டங்களுடனும் விஜயவாடா ஆயர்வேத மருந்து உற்பத்தியாளர் சங்கத்துடனும் கலந்துகொண்டு ஒரு கூட்டுச்சங்கத்தைத் தாத்காலிகமாக ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம் இது விஷயத்தில் எல்லாக் காரியங்களைச் செய்யுமாறும் ஆலோசனை அளிக்கப்பட்டது

**2.** ஜில்லா போர்டுகளிலும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களிலும் A. வகுப்பில் பதிவு செய்த வைத்யர்களை நியமிக்கும் முன்னும் பின்னும் நியமிக்கப்பட்ட B. வகுப்பு வைத்யர்களுக்கும் பொறுப்பு சேவை முதலியவை சமமாக இருந்தும் ஊதியத்திலும் சலுகைகளிலும் சர்க்கார் காட்டும் பாரபக்ஷத்தைக் இக்கூட்டம் மிகவும் வன்மையுடன் கண்டிக்கின்றது. A. வகுப்பாருடன் இவர்களுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்துகின்றது.

வேறு விஷயங்கள் ஒன்றும் கொண்டுவரப்படவில்லை.

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
போதுக் காரியதர்சீ.

---


திருச்சி

**ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.**

17 சின்னக்கடைத் தெருவு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி.

**வைத்தியர்களுக்கு**

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

உ

## अथ कलिङ्ग परिभाषा।

स्थितिर्नास्त्येव मात्रायाः कालमग्निं वयो बलम्।
प्रकृतिं दोषदेशौ च दृष्ट्वा मात्रां प्रकल्पयेत्॥
यतो मन्दाग्नयो ह्रस्वा हीनसत्वा नराः कलौ।
अतस्तु मात्रा तद्योग्या प्रोच्यते सुज्ञसम्मता॥
यवो द्वादशभिर्गौरसर्षपैः प्रोच्यते बुधैः।
यवद्वयेन गुञ्जा स्यात् त्रिगुञ्जो वल्ल उच्यते॥
माषो गुञ्जाभिरष्टाभिः सप्तभिर्वा भवेत् क्वचित्।
स्याच्चतुर्माषकैः शाणः स निष्कष्टङ्क उच्यते॥
गद्याणो माषकैः षड्भिः कर्षः स्याद् दशमाषकः।
चतुष्कर्षैः पलं प्रोक्तं दशशाणमितं बुधैः॥
चतुष्पलैश्च कुडवः प्रस्थाद्याः पूर्ववन्मताः॥
इति कलिङ्ग परिभाषा।

இருவிதமான பரிபாஷைகளில் மாகத பரிபாஷையை முடித்து, கலிங்க பரிபாஷையைச் சொல்லத் தொடங்கும் பொழுது, வைத்தியன் மருந்தின் மானத்தை நிர்ணயிப்பதில் அவசியம் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்களை முதலில் உபதேசிக்கிறார். **स्थितिर्नास्त्येवेति** — மருந்துகளுக்குப் பொதுவான அளவு திட்டம் எந்த விதத்திலும் தீர்மானித்து வைக்கமுடியாது. வஸந்தம் முதலிய காலபேதங்கள், நோயின் பலவித கால மாறுபாடுகள் அதாவது ஆரம்ப ஸமயம் பக்குவ காலம் முதலிய, ஜாடராக்னி தாத்வக்னிகளுடைய நிலை, ஜனித்த குழந்தை முதல் விருத்தாப்பிய காலம்வரையில் வயஸ் மாறுபாடுகள், சரீர பலம், மனோபலம், வாதபித்த சிலேஷ்மங்களாலான பிரகிருதி விசேஷங்கள், தோஷங்களுடைய விருத்தி க்ஷயங்கள், ஜாங்கல ஆநூப ஸாதாரணங்களான தேசங்கள் இவைகள் அனைவற்றையும் நன்றாய்க் கவனித்து அந்தந்த மருந்துகளுடைய அளவை அந்தந்த நோயாளியின் அந்தந்த சூழ்நிலையை அப்போதைக்கப்போது நிதானித்து மருந்தின் அளவை நிச்சயித்துக்கொள்ளுவது உத்தமமானது.

மான பரிபாஷை அவச்யமே. ஆயினும் மாகத பரிபாஷை பிரஸித்தியாயிருக்கும்பொழுது, புதிய கலிங்க பரிபாஷை எதற்காக என்ற ஸம்சயத்தைப் போக்குகிறார் **यतोमन्दाग्नय इति** — கலியுக

காலம் அதிகமதிகமாக இப்போழுது நரர்கள் அக்னிபலம் குறைந்த வர்களாயும், ஆகிருதி சிறுத்தவர்களாகவும், பலம் குன்றினவராயும் இருக்கின்றனர். இந்தக்காலத்திய மனிதர்களுக்கேற்றவாறு இந்த் மான பரிபாஷை சொல்லப்படுகிறது.

கௌரஸர்ஷபங்கள் **12**-யவம் **1**, யவங்கள் **4**-குஞ்சா **1**, குஞ்சாக்கள் **3**-வல்லம் **1**, குஞ்சாககள் **8**-மாஷம் **1**, குஞ்சாக்கள் **7**-மாஷம் **1** என்று சில இடங்களில் அனுஷ்டானம். மாஷங்கள் **4**-சானம் **1**, நிஷ்கம் **1**, அல்லது டங்கம் **1**, மாஷங்கள் **6**-கத்யாணம் **1**, மாஷங்கள் **10**-கர்ஷம் **1**, கர்ஷங்கள் **4**-பலம் **1**, பலங்கள் **4**-குடவம் **1**, குடவங்கள் **4**-பிரஸ்தம் **1** பிரஸ்தத்திலிருத்து மேற்கொண்ட அளவுகள் யாவும் மாகத மானபரிபாஷையில் சொல்லப்பட்டிருப்பதுபோலவே.

குறிப்பு:— மாகத மானமும், காலிங்க மானமும் பூராவாக கணக்கில் ஸமந்வயம் ஆகிறதில்லை. கர்ஷத்திற்குமேல் இரண்டிலும் கணக்கு ஒருமாதிரியே. இரண்டிலும் ஒரு பலத்திற்கு நான்கு கர்ஷங்களே. கர்ஷத்தின் மான நிஷ்டையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இந்த நாளில் வழக்கத்திலிருக்கும் ஒரு வெள்ளி ரூபாய் எடையான ஒரு தோலா ஒரு கர்ஷமென்று காலிங்க பரிபாஷைப்படிக்கும் இரண்டு தோலா ஒரு கர்ஷமென்று மாகத பரிபாஷைப் படிக்கும் சரியாக இருக்கிறதாக விசேஷமறிந்த பண்டிதர்கள் நிர்ணயம் செய்துள்ளார்கள். சரக ஸுச்ருதமிரண்டு ஸம்ஹிதைகளுக்கும் வியாக்கியானம் செய்துள்ள ஸ்ரீ சக்ரதத்தர் அவருடைய சிகித்ஸா ஸாரஸங்கிருஹம் என்ற நூலில் ஜ்வர சிகித்ஸையில் **58, 59**-வது சுலோகங்களில் சரக சுச்ருதர்களுக்குள் இருக்கும் மானத்தின் மத பேதத்தை விளக்கி, சரகருடைய பலத்தின் சரிபாதி ஸுச்ருதரின் பலம் என்று எடுத்துக் காட்டியுள்ளார். இதைப்பற்றி அதிகமறிய விரும்புவோர் ஸ்ரீ சிவதாஸஸேன வ்யாக்கியானத்துடன் சக்ரதத்த ஜ்வர சிகித்ஸையைப் பார்த்துக் கொள்ளவும்.

இதில் முக்கியமாய் நினைவுவைத்துக்கொள்ள வேண்டிய விஷயமாவது:— ஔஷதயோக ஸங்கிருஹக் கிரந்தங்களில் சரக யோகங்கள் ஸுச்ருத யோகங்கள் அப்படியே எடுத்து எழுதப்பட்டிருக்கின்றன வல்லவா? இம்மருந்து முறைகளை ஏதாவதொரு இஷ்டமான மான பரிபாஷையில் அர்த்தம் செய்துகொள்வது

மிகவும் தவறுதலாகும். பிரத்யேக மருந்துக்கும் அம்மருந்து மூல ச்லோகம் யாருடையது? சரகருடையதா? ஸுச்ருதருடையதா? என்று கவனித்து அந்தந்த மூலகர்த்தா பிரயோகம் செய்துள்ள மானபரிபாஷைப்படியேதான் மருந்தைத் தயாரிக்கவேண்டும்.

இனிப் புதிதாகப் புஸ்தகமெழுதுபவர்கள் பரிபாஷையில் ஒரு க்லேசமில்லாமல் எழுதுவது எளிது நல்லது. பிராசீன பரிபாஷைகளை ஸமந்வயம் செய்வது மிகக் கடினமாயிருக்குமென்று தோன்றுகிறது. ஸுலப வழியைக் கடைப்பிடித்து இந்த யோகரத்நாகரத்தின் தமிழுரையில் இக்காலத்தில் எங்கும் பிரஸித்தமாய் வழக்கத்திலிருக்கும் மான பரிபாஷையில் முடிந்தவரை ஸம்சயமின்றி எழுதப் பிரயத்தினம் செய்கிறோம்.

அவ்விதமே இந்த நாளில் இருக்கும் மனிதரின் சரீர சக்தியையும், மருந்துகளுடைய வீர்யத்தையும் அனுஸரித்து இப்பொழுது உபயோகிக்கக்கூடிய அளவை பிரதி மருந்துகளிலும் சொல்லப் போகிறோம்.

பாரத தேசத்தில் இப்பொழுது பிராசீன ஆயுர்வேத நூல்களில் சொல்லியிருக்கும் பலம் என்பதற்கு கேரள தேசத்தில் சிலர் ஐந்து தோலா நிறையும், வங்காள தேசத்தில் எட்டு தோலா நிறையும், குர்ஜர மஹாராஷ்டிர தேசங்களில் நான்கு தோலா நிறையும் அர்த்தம் செய்து அநுஷ்டானத்திலும் வைத்துக்கொண்டிருக்கின்றனர். தமிழ் நாட்டில் இன்று வைத்தியர்கள், மற்ற கடைக்காரர்கள் போலவே ஒரு பலத்திற்கு மூன்று தோலா எடுக்கின்றனர். தமிழ் நாட்டில் புராதனத் தமிழ் நூல்களிலும் மான பரிபாஷை ஒரு திட்டமாய் இருந்ததாகத் தெரியவில்லை. பிராசீன ஸம்ஸ்கிருதக் கிரந்த நூலிற் கூறிய பல சப்தத்திற்கு தமிழ் தேசத்து வைத்திய ஸம்பிரதாயத்தில் பெரியோர் எடுத்துக்கொண்ட எடையும் நான்கு தோலா என்றே கேள்வி. சரக மதமான மாகதமானப்படிக்கு பலம் ஒன்றுக்கு தோலா எட்டு. ஸுச்ருத மதமான காலிங்கமானப் படிக்கு பலம் ஒன்றுக்கு தோலா நான்கு என்பது தீர்மானம். வட இந்தியாவில் வங்காளம் தவிர மற்ற இடங்கள் பூராவும் இன்றைய வைத்தியாசிரியர்கள் எல்லோரும் பலம் ஒன்றுக்கு நான்கு தோலோ விகிதத்திலேயே நூல்கள் இயற்றுகின்றனர்.

கலிங்க பரிபாஷை முற்றிற்று.

अथ धान्यादिफलकन्दशाकगुणाः।

श्वेता रक्ताः स्थूलसूक्ष्मा ये चान्ये शालयः शुभाः।
स्वादुपाकरसाः स्निग्धा वृष्या बद्धाल्पवर्चसः॥ 1
कषायानुरसाः पथ्या लघवो मूत्रला हिमाः।
षष्टिका व्रीहिषु श्रेष्ठाः गौरश्चासितगौरतः॥ 2

சிகித்ஸையில் பத்யாபத்ய ஞானம் மிகவும் முக்கியமானது. த்ரவ்ய குண சாஸ்த்திரத்தில் இவ்விஷயம் விஸ்தாரமாய் கூறப்பட்டிருக்கிறதை வைத்தியன் கசடறக் கற்றிருக்கவேண்டும். பிரதி தினமும் உபயோகத்திலிருக்கும் ஆஹாரவர்க்கத்தைப் பெரிய நூல்களிலிருந்து கவனிப்பது சிரமஸாத்தியம். இந்த யோகரத்நாகரம் வைத்தியனுக்கு கைப்புத்தகமாய் விளங்கக் கூடியதாகையால் இதில் பத்யாபத்ய ஞானத்திற்கு தினசரி உபயோகத்திலிருக்கும் ஆஹார வர்க்கத்தின் உபதேசம் இருப்பது வைத்தியனுக்குப் பேருபகாரமாகுமெனக் கருதி அன்ன பான விதியை தாங்யங்கள் முதல்கொண்டு உபதேசிக்க ஆரம்பிக்கிறார்.

முதலாவது நெல். இது சாலி தான்யம் எனப்படும். பெரியக் கிரந்தங்களில் ஸம்ஸ்கிருத பாஷையில் நெல்லின் பல வகைகள் கூறப்பட்டிருக்கின்றன. நமது தமிழ் நாட்டிலும் பலவகை நெற்கள் இருக்கின்றன.

ஸம்ஸ்கிருதத்தில் சொல்லியிருக்கும் நெற்களின் பெயர்களுக்கு அநேகமாய் தமிழ் பெயர் சொல்ல முடிகின்றது. சிலவைகளுக்கு எனக்குச் சொல்ல முடியவில்லை. நெல்லு வகை பல இருந்தாலும், பிரதி வகைக்கும் குணபேதம் நிச்சயமாக இருப்பினும், நெல்லு ஸாமான்யத்திற்குப் பொதுவான குணங்களிருக்கின்றன. அக் குணங்களைச் சொல்லுகின்றார். श्वेता रक्ता : என்று — வெள்ளை, சிவப்புநிறமுள்ள நெல்லுகள் கனத்தவகை, மெல்லியவகை, எல்லா நெல்லுக்கும் பிரதான ரஸம் மதுரம், பாகமும் மதுரம். அநுரஸம் கஷாயம். சீதவீர்யம். ஸ்நிக்த—லகு குணமுடையவை. விருஷ்யமாகும். மலத்தைக் குறைத்துக் கட்டவும் செய்யும். மூத்திரத்தைப் பெருக்கும். நித்யமான ஆஹாரத்திற்கு நெல் தான்யம் நல்ல பத்தியமானது. சுபத்தைத்தரும். நெல் பொதுவிற்கு சாலி என்று சொல்லப்படினும், சம்பா நெல்லுக்கு சாலி என்றும், குறுவை நெல்லுக்குவ்ரீஹி என்றும் வியவகாரம். குறுவைநெல் வகைகளில் அறுபதாங்குறுவை ச்ரேஷ்டமானது. அதிலும் கறுங்குறுவையைப் பார்க்கிலும் வெண்குறுவை சிலாக்கியமானது.

நீங்கு கார்த்திகைக் கிழங்கு நிலக்குமிழ் தசமூலம்தான்
பாங்குறு தமஞ்சள் மூன்றும் பகர்குப்பைக் கடுகுரோணி
தேங்கு சாரடை யெருக்கு சேர் கொடிவேலி சீந்தில்
பாங்கு நல்லெண்ணெய் சேர்த்துப் பருவமாய்
எரித்து முழுகே. 27

[க-ரை] கலப்பைக்கிழங்கு, நிலக்குமிழ், தசமூலம், கப்பு மஞ்சள், கரி மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பை, கடுகு ரோகிணி, சாரடை, எருக்கின் வேர் கொடிவேலி வேர் பட்டை, சீந்திற் கொடி, இவைகளை நல்லெண்ணெயில் அரைத்துக் காய்ச்சித் தைலம் எரித்து முழுகி வர கபால நோய்கள் விலகும்.

**12.** வித்திரதி, பிலீகை, உதாம் போன்ற வியாதிகளுக்கு.

பருவமாங் கவிசையோடு பக்க விப்புருதி சோர்வை
உருவமாம் பிலீகை மிக்க வுதரத்தில் சூலையன்றிக்
கருவதை யழிக்கும் நெற்பக் கடியவிப் புருதி சாலப்
பெரு வயிறுடனே தொந்தப பெருமகோ தரமுந்தானே 28

பெருத்தபேய் தும்மட்டிக்காய் தான் பேசு வெள்ளைக்காக்கரட்
திருத்தமாய் லவணமஞ்சும் செய்கிடும் காரமஞ்சும் [டான்
வருத்த மாவிலங்கை கொன்றை வச்சிரத்தின் பால்மூலம்
கருத்துற வசம்பு மஞ்சள் காயம் வெள்ளுள்ளியும் கூட்டே 29

காய்ந்தநற் சிவதை போளம் காட்டுஞ மணக்கவ்வேரும்
வாய்ந்த ரோகிணி முருங்கை வளறுமாலவுரி சின்னி
பாய்ந்திடும் கழற்சிக் கொத்தான் பகரும் வேலிப்பருத்தி
தோய்ந்த வேரண்ட யெண்ணெய் சேர்ந்தெரித்துக்
கொள்ளே 30

[க-ரை] பேய் தும்மட்டிக்காய், வெள்ளைக்காக்கரட்டான் வேர், ஐந்து உப்புகள் (உப்பு, இந்துப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, உவர்மண் உப்பு) ஐந்து காரங்கள், (யவச்சாரம், வெங்காரம், சத்திக்காரம், நவச்சாரம், சீனக்காரம்) மாவிலங்கைப்பட்டை, கொன்றைப்பட்டை, சதுரக்கள்ளிப்பால், வசம்பு, மஞ்சள், காயம் இச்சரக்குகளைச் சமனெடையாகச் சேர்த்துத் தூள் செய்து கொள்ளவும்.

செவதை வேர், போளம், காட்டாமணக்கின் வேர், கடுகு ரோகிணி, முருங்கைப்பட்டை, ஆலம்பட்டை, அவுரி வேர், சின்னி வேர், கழற்சி வேர், கொத்தான், வேலிப்பருத்தி இவை களை யரைத்துக் கல்கமாகவும், கஷாயமாகவும் சேர்த்து ஆமணக் கெண்ணெய்யிலிட்டுக் காய்ச்சி தைலம் வடித்துக் கொள்ளவும்.

இந்த சூர்ணமும், எண்ணெய்யும், கவிசை, பக்க விப்புருகி, பிலீகை, உதரம், கர்ப விக்ரதி போன்ற நோய்களில் உட்கொள்ளச் சிறந்தவை.

## 13. வாத ரோகங்களில்

சேர்ந்திடு மிரத்தரோகம் செய்யநெஞ் சிருகல் குன்றல்
பார்த்திடு மூர்த்தவாயு பயித்திய வாய்வுரோகம்
சாத்திடும் வாதநோயில் சர்வாங்க வாயுமூலம்
ஏர்த்திடும் வாய்வுக்கெல்லாம் இசைந்திடு மருந்துகேளே 31

இசைந்த சீரகமிரண்டும் இயல் திரிகடுமூலம்
அசைந்தநற் சித்திரமூலமாந்திரிபலையுமிந்து
இசைந்த வாய்விளங்கம் காயம் இருத்திடும் சவுட்டுமண்ணும்
கசந்த ரோகிணியும் தேனும் கலந்துகொள் ரோகம்
போமே 32

[க-ரை] சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டங்கிப்பிலி, கொடிவேலி வேர், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இந்துப்பு, வாய்விளங்கம், பெருங்காயம், சவுட்டு மண், கடுக ரோகிணி, இவைகளைச் சமனெடை சேர்த்துத் தூளாக்கி தேனுடன் உட்கொள்ள மார்பு இருகிக் குத்தல் ஏற்படுதல், கபால வாயு, பைத்திய வாயு, சர்வாங்க வாயு போன்ற பித்த சம்பந்தமான வாத ரோகங்களில் சிறந்த பலனளிக்கும்.

## 14. ரக்த பித்தம், பெரும்பாடு, எலும்புருக்கி நோய்களுக்கு

கலந்திடும் ரத்தவாந்தி கணரத்த ரோகம் நெஞ்சில்
புலந்திடும் ரத்தபித்தம் பொருந்திய சயகாசங்கள்
கலந்திடும் பெரும்பாட்டோடு வளர் எலும்புருக்கி சூலை
நலந்திகழ் புண்ணும் தீர நாரியே மருந்து கேளே 33

நாரியே தண்ணீர்விட்டான் நல்லத்தி யாசால் வித்துப்
பாரிய பனையுஞ் சீந்தில் பகர்முத்தம் சாதிக்காயும்
சீரிய கிராம்பு பத்திரி திரவிய மஞ்சும் கூட்டிக்
கூறிய நெய்யில் பண்ணிக் கொடுத்திட ரோகம்போமே 34

[க-ரை] தண்ணீர்விட்டான்: அத்திப்பழம், அரச விதை, ஆல விதை, பனை வித்து, சீந்தில், கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், லவங்கப்பத்திரி, ஏலம், கிராம்பு, சீரகம், கோஷ்டம், சம்பக மொட்டு இவைகளைச் சமனெடை தூள் செய்து நெய்யில் சாப்பிட ரக்த வாந்தி, கணச்சூடு, ரக்த பித்தம், க்ஷயம், காசம், பெரும்பாடு, எலும்புருக்கி, சூலை புண்கள் இவை நீங்கும்.

## 15. ஜ்வரங்களுக்கு

கொடுத்திடு சுரத்திற் கெல்லாம் கூரிலா மிச்சை சீந்தில்
மெடுத்த காஞ்சூரியும் முத்தமிசைந்த பற்படகமுமட்டி
மடுத்திடும் வேப்பு கோட்டம் வளர்கண்டகாரி தேக்கு
கடுத்த திப்பிலி யஞ்சுக்கு தன்னுடன் கஷாயங்கொள்ளே 35

[க-ரை] விளாமுச்சம் வேர், சீந்திற்கொடி, காஞ்சூரி வேர், கோரைக்கிழங்கு, பர்பாடகம், சிற்றாமுட்டி, கோஷ்டம், வேப்பம் பட்டை, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, திப்பிலி இவைகளைக கஷாயமிட்டு சாப்பிட எல்லாவித ஜ்வரங்களும் நீங்கும்.

## 16. சன்னிகளுக்கு

தன்னுடன் சன்னிக்கெல்லாம் தாங்கிய முசுற்றுமுட்டை
மன்னு பூனகமென்னும் வருத்துப்பின்னைப் புல்லூரி
சொன்ன திப்பிலி முலைப்பால் துடங்கி யிஞ்சிச்சாறு
பன்னு திப்பிலி சிந்தூரம் பண்ணினுல் எவர்க்குமாமே 36

பன்னிய விருபி நாபி பகர் ரச கெந்தகம்தான்
நன்னிய காரம் காந்தம் நலத்திடு தாரம் வாளம்
குன்னிய சிலை கிராப்பும் கூரிய மிளகு சுக்கும்
எண்ணி திப்பிலியிஞ்சிச்சாறும் இது சுரம் சன்னி
போமே 37

[க-ரை] முசுற்றுமுட்டை யெனும் மரங்களில் கட்டும் எறும்பு முட்டை, வருத்த மண்ணுண்ணிப்பாம்பு, பின்னை மாத்தி லுண்டாகும் புல்லுருவி, திப்பிலி, ஆனை திப்பிலி, ரஸ ஸிந்தூரம் இவைகளை இஞ்சிச் சாற்றிலும், முலைப்பாலிலும் அரைத்து மாத் திரைகளாக்கி உபயோகிக்கச் சன்னி ரோகத்தில் சிறந்த பய னளிக்கும்.

இருவி, நாபி, ரசம், கந்தகம், வெங்காரம், காந்தம், தாளகம், நேர்வாள வித்து, மனோசிலை, கிராம்பு, மிளகு, சுக்கு, திப்பிலி இவைகளைச் சமனெடை சேர்த்து இஞ்சிச்சாறு விட்டரைத்து மாத்திரையாக்கிச் சன்னிகளில் கொடுக்கலாம்.

## 17. குமரகண்டம் வலிப்பு முதலியவைகளுக்கு

இதுமுதற் குமரகண்டம் நிறைந்திடும் முசலகண்டம்
நமனுவுடன் குதிரை நோவும் வலிப்புடன் பலவலிப்பும்
மதுமமா வவரிச்சாறும் பகர்வசம்புள்ளி கூட்டி
முதுரசியம் தான்பண்ணி பிழிந்திடில் ஓடிப்போமே 38

ஓடிய சர்பத்தோடு உள்ளியும் வசம்பு காரம்
நாடிய கௌரி நாபி நயந்திடு காயும் போளம்
தேடிய மஞ்சள் மூலம் திரண்ட மாவிலங்கை வாகை
சூடிய பெருமருந்து சொற்சிறு குருஞ்சான் கூட்டே 39

சொல்லிய வெருக்கும் புங்கும் துவங்கிய முருங்கைவேரும்
மல்லிகை சதுரக்கள்ளி மாமஞ்சள் நெரியாசிப்பால
புல்லிய எண்ணெய் ஐந்தும் புகலும் குக்குடத்தினண்டம்
துல்லிய பதமதாக்கிக் கருத்துடன் மேலும் பூசே 40

[கரை] குமர கண்டம், முசல் கண்டம், குதிரை வலிப்பு, போன்ற பல வலிப்பு நோய்களில் அவுரிச் சாற்றில் வசம்புத் தூளும் உள்ளிப்பூண்டின் ரஸமும் சேர்த்து மூக்கில் நசியமிட வலிப்பு நீங்கும். மண்ணுண்ணிப்பாம்பு, உள்ளி, வசம்பு, வெங்காரம், கௌரி, நாபி, பெருங்காயம், போளம், மஞ்சள், மாவிலங் கப்பட்டை, வாகை, ஈசுவரமூலி, சிறுகுஞ்சான், எருக்கம் வேர், புங்கின்பட்டை, முருங்கைவேர், மல்லிகைவேர், சதுரக்கள்ளி, மாமஞ்சள், நெரியரிசிப்பால், இவைகளைக் கல்கமாக்கி ஆமணெக் கெண்ணெய், புங்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய், வேப்பெண்ணெய், இவ்வைந்தெண்ணைகளில் கலக்கி கோழி முட்டையையும் உடைத்துவிட்டு எரித்தெடுத்து மேல் பூசிவர வலிப்பு நீங்கும்.

## 18. கரப்பானுக்கு

கருத்துடன் உட்கரப்பான் கருங்கொள்ளிக் கரப்பான் வீங்கி
வருத்திடு கரப்பான் பித்தவாத சேற்றும கரப்பான்
பெருத்திடு செங்கரப்பான் பிலத்தோமறி கரப்பான
திருத்தமாங் கருங்கரப்பான் தீர்ந்திட மருந்து கேளே 41

தீர்ந்திடு செங்கத்தாரி சேர்கரு நொச்சி கொத்தான்
சார்ந்திடுங் கழற்சி புங்கு சங்கொடு சங்கங் குப்பி
போர்ந்திடும் கிரந்திநாயன் புகழ் செருப்படி தான் சின்னி
கூர்ந்த வேலிப்பருத்தி கொடியவெள்ளருகு கூட்டே 42

கொடியவெம் பாடம்பட்டை கூறிய சிவனார்வேம்பு
நெடியதோர் சிவதைமூலம் நேரிய கண்டங்காலி
பொடியது கடுக்காய்சோணி பூதகரப்பான் பட்டை
வெடியசீரகமிரண்டும் விளக்கெண்ணெய் எரித்துக்கொள்ளே 43

[க-ரை] செங்கத்தாரி, கருநொச்சி, கொத்தான், கழற்சிஇலை, புங்கின் இலை, சங்கம் இலை, சங்கங்குப்பி இலை, கிரந்திநாயகம், செருப்படி, சின்னி, வேலிப்பருத்தி, வெள்ளருகு, வெம்பாடம்

பட்டை, சிவனார்வேம்பு, செவதைவேர், கண்டங்கத்திரி, கடுக்காய், கடுகுரோகிணி, பூதகரப்பான் பட்டை, சீரகம், கருஞ்சீரகம், இவைகளைக் கல்கமாக்கி, விளக்கெண்ணெயிலிட்டு எரித்து தைலமாக்கி வடிகட்டிக்கொண்டு உள்ளுக்குச் சாப்பிட்டுவர பல வகை கரப்பான் நோய்களும் விலகும்.

## 19. விஷபாகம்

கொள்ளவே விஷபாகங்கள் கூறிய பலவுமுண்டு
முள்ளி தூதளை நார்த்தை முதிருய்யக் கொண்டான்நொச்சி
கள்ளவிழ் பிரமிசின்னி கழற்சி மாமலைநன்னாரி
தெள்ளிய கடுக்காய் சுக்கு செய்திடு குடிநீர்தானே 44

[க-ரை] முள்ளி, தூதுவளை, நார்த்தை, உய்யக்கொண்டான், நொச்சி, பிரமி, சின்னி, கழற்சி இலை, மலைநன்னாரி, கடுக்காய், சுக்கு இவைகளாலான குடிநீர் பலவித சில்லரை விஷங்களைப் போக்கவல்லது

## 20. கண்டமாலை பவுத்திரம் முதலியவைகளுக்கு

செய்யதோர் கண்டமாலை சேர்ந்திடும் பவுத்திரங்கள்
வைய்ய விப்புருதி வீக்கம் மேலிய துடையில் வாழை
பையவே பனைச்சூலை பருத்திடு பிளவையல்லால்
துய்யவே யரையாப்போடு துலங்கிட மருந்துகேளே 45

துடங்கிய எருக்குநீலி தொண்நார்த்திகைக் கிழங்கு
மடங்கிய குன்றிவெட்டி வளர்பெரு மருந்துகஞ்சா
முடங்கிய வசம்புகாயம் முதிரவெள்ளை யுள்ளிகூட்டி
யடங்கி வீக்கத்தில்பூச வடங்கிடா துடைந்தால்கேளே 46

உடைந்தவேப் பெண்ணெய்யுள்ளி ஓங்குவெம்பாடல் துத்தம்
கடைந்த சுந்தகமும் சூதம் காசு நற் துறிசிநாபி
விடைந்த குங்கலியம் குக்கில் மிருதார சிங்கிதாரம்
வுடைந்திலா தைலமாக்கி வர்தமா ரோகம்போமே 47

[க-ரை] கண்டமாலை, பவுத்திரம், விப்புருதி வீக்கம், துடைவாழை, பிளவை, அரையாப்பு போன்ற நோய்களில் வீக்கம் பழுத்து உடையாமல் அமுங்கிக் கரைந்துபோக, எருக்கு வேர் பழுப்பு, அவுரிவேர் கலப்பைக் கிழங்கு: குந்துமணி, வெட்டி இலை, ஈசுவரமூலி, கஞ்சா, வசம்பு, காயம், உள்ளிப்பூண்டு, இவைகளை அரைத்து வீக்கத்தில் பூசவும்.

மூன் சொன்ன வியாதிகளில் வீக்கம் பழுத்து உடைந்து விட்டால் புண்ணை சுத்திசெய்து ஆறவைக்க—வேப்பெண்ணையில் உள்ளிப்பூண்டு, வெம்பாடம்பட்டை, பால்துத்தம், கந்தகம் ரஸம், துறிசு, நாபி, குங்கலியம், குக்கில், மிருதாரசிங்கி, தாளகம், இவைகளை அரைத்துக் கல்கமாக்கி இளந்தீயில் தைலமாக்கிக் காரத் துணியிலிட்டுப் புண்ணில் வைக்கவும்.

## 21. கண் நோய்களுக்கு

இந்த நீலமாகாச இயல்புறு பித்தகாசம்
மந்தமா படலம் பில்லம் மயிர்குத்து புழுவெட்டோடு
சந்தியா மாலைக்கண்ணுந் தளரளிக் கண்ணும் நேத்திரம்
வந்திடு வாய்வுக்கெல்லாம் மருந்துதா னுரைக்கக்கேளே 48

உரைத்திடு முத்து வெள்ளி உயர்ந்த தாம்பிரம் சங்கோடு
கரைந்திடு துருசு துத்தம் கலைந்கலையோடு பொன்னும்
நிறைந்திடு பீதரோணி நேர்புங்கு நிம்பச் சாற்றில்
அரைத்திடு கண்ணில் தொண்ணூற் றாறுமே
யகந்து போமே 49

போமிது பொன்னுங்கண்ணி புகழ்சிறு கீரைமுத்தம்
ஓமிது சீந்தி நிம்பம் உயரும் நார்த்தை கோட்டம்
மாமிது மதுரமேலம் அலரும் செண்பகப்பூ வங்கம்
நாமிது சொன்னே மெண்ணெய் நயந்தெரி முழுகப்
போமே 50

[க-ரை] முத்து, வெள்ளி, தாம்பிரம், சங்கு, துருசு, துத்தம், கலைமான் கொம்பு, பொன், பீதரோகிணி, புங்கம் விதை, இவைகளை வேப்ப இலை கஷாயத்தி லரைத்துக் கண்ணுக்குக் கல்கமிட நீலகாசம், பித்த காசம், படலம், பில்லம், மயிர்குத்து, புழு வெட்டு, மாலைக்கண், அளிக்கண், நேத்திர வாயு இவைகளில் சிறந்த குணமளிக்கின்றது.

பொன்னுங்கண்ணி, சிறுகீரை, கோரைக்கிழங்கு, சீந்திற் கொடி, வேப்பிலை, நார்த்தை இலை அல்லது பழத்தோல், கோஷ்டம், அதிமதுரம், ஏலரிசி, செண்பக மொட்டு, கிராம்பு இவைகளைக் கல்கமாக்கி நல்லெண்ணெய்யில் கலக்கி தைலம் வடித்து முழுக முன் கூறிய கண் நோய்களில் மிகவும் உபகாரமாகும்

தைலம் செய்முறைகளிலுள்ள பிரகாரங்கள் முன்னரே கொடுக்கபபட்டிருக்கின்றது.

திரட்டு வாகடம் ஐம்பது முற்றிற்று.

மதராஸ் ஸ்டேட் இன்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்,

X 185, லேட்டிஸ்பிரிட்ஜ் ரோட், அடையாறு, மதராஸ்.

பிரஸிடெண்ட்: வைத்யரத்ன கேப்டன் G. ஸ்ரீனிவாசமூர்த்தி. பி. எ, பி. எல். எம். பி. ஸி. எம்.

## அறிக்கை.

1. ஆயுர்வேத, சித்த, யூனனி தேசீய மருந்துகள் சாஸ்திர சம்பந்தமாயும் தக்க மேல்பார்வையுடனும் தயார் செய்து தேசீய மருந்துகள் கையாளப்பட்ட டாக்டர்களுக்கு சப்ளை செய்ய மதராஸ் ப்ரொவின்ஷியல் இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் பார்மஸி ஸ்டோர்ஸ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது டாக்டர்களுக்கு வேண்டிய சுத்தமான மருந்து சாமான்களும் மூலிகைகளும் சப்ளை செய்யப்படும்.

2. தேசீய இந்திய டாக்டர்களும், இதர விதமான பட்டம் பெற்ற தேசீய வைத்தியர்களுக்கும் மாத்திரம் மேற்கண்ட சொஸைடியில் மெம்பராகச் சேரலாம்.

3 ஒரு பங்கின் விலை 5 ரூபாய், பிரவேசக் கட்டணம் பங்கு 1-க்கு 4 அணா கட்டவேணும் ஒரு மெம்பர் 1000 பங்குவரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பிரவேசக் கட்டணம் எல்லா பங்குகளுக்கும் கட்டவேண்டியது 5 ரூபாய்தான்.

4 மேற்கண்ட சொஸைட்டியின் நடந்த 3 வருஷத்தில் லேவாதேவி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது

| | | 1945-46 | 1946-47 | 1947-48 |
|---|---|---|---|---|
| 1. | மெம்பர்கள் (தேசீய டாக்டர்கள்) | 261 | 364 | 442 |
| 2. | பங்குத் தொகை | 12,985 | 14 135 | 16,160 |
| 3. | மருந்து விற்பனை | 68,589 | 1 15, 683 | 1,38 348 |
| 4. | லாபம் | 6,000 | 15,085 | 40,522 |
| 5. | பங்குக்கு வட்டி (பைலாவில் ஏற்பட்டபடி) | 5% | 5% | 5% |
| 6. | மருந்து வாங்கியதின் பேரில் லாபம் | 1 ரூபாய்க்கு 1 பை வீதம். | 1 ரூபாய்க்கு 4 பை வீதம். | 1 ரூபாய்க்கு 6 பை வீதம் |

5. தேசீய வைத்தியர்கள் யாவரும் மேல்கண்ட சொஸைடியில் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கி சொஸைடியின் லேவாதேவியை அபிவிருத்தி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வை. கோண்டல்ராவ்,
காரியதரிசி.

V. P. A.

# "சக்தி ஸஞ்சீவி"

(REGD.)

டிரேட்  மார்க்

வைத்ய வாசஸ்பதி

## பண்டிட் P. S. ராமசர்மா

அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினுல் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்.

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்!

தயாரிப்பவர் :—

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர். (S. Ry.)

Published by Pandit P. S. Rama Sarma for Tamil Nad Ayu
veda Maha Mandalam & Printed at the Vadivel Press, Karu